# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 9
SEPTEMBER 2021 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன்.

2021 **ஜூலை – ஆகஸ்ட்** ஜாமக்காரன் பத்திரிகையை ஒன்றாக இணைத்து **செப்டம்பர்** மாதம் உங்களுக்கு அனுப்பியது கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். அந்தந்த மாதத்திற்குரிய ஜாமக்காரனை உரிய மாதத்தில் அனுப்ப இயலவில்லை. பழையபிரஸ் சிறிய ஆப்செட்டில் அச்சடிப்பதால் **தமிழ் – மலையாளம்** இரண்டு பாஷை பத்திரிகையையும் உரிய நேரத்தில் வெளியிட முடிவதில்லை.

இந்த ஆசிரியர் குறிப்பை (Editorial) செப்டம்பர் மாதம் கடைசி வாரத்தில்தான் எழுதுகிறேன். **திருநெல்வேலி** திருமண்டலத்தில் **பிஷப் எலக்ஷன்** பிரச்சனை இல்லாமல் **நல்லவிதமாக** முடிந்ததை நினைத்து சந்தோஷப்படுகிறேன். யார் **பிஷப்பாக வரக்கூடாது** என வாசகர்களும் சில ஆயர்களும் நானும் (Dr.புஷ்பராஜ்) நினைத்தோமோ அந்த **ஆயர்** பிஷப் பேனலில் தெரிந்தெடுக்கப் படாததை நினைத்து சந்தோஷப்படுகிறேன். கடந்த ஜாமக்காரனில் **பிஷப்பின் தகுதி** என்ன என்று நான் எழுதிய கட்டுரையை சில **ஆயர்களும்** விசுவாசிகளும் காப்பி எடுத்து மற்றவர்களுக்கு வினியோகித்ததாக அறிந்தேன்.

# SEPTEMBER - 2021

எப்படியோ **திருநெல்வேலி** CSI **திருமண்டலம் நீதிமன்ற** பொறுப்பிலிருந்து **விடுவிக்கப்பட்டு** ஜனநாயக முறையில் **நிர்வகிக்கும் நிலை** ஏற்பட்டதற்காக சந்தோஷப் படுகிறேன். கர்த்தரை துதிக்கிறேன்.

இனியாவது **சபை மக்கள்** கர்த்தருக்கென்று அளிக்கும் காணிக்கைகளை **கோர்ட்டுக்கும், வக்கீல்களுக்கும்** போலீஸ் ஸ்டேஷனுக்கும் **செலவழிக்க மாட்டோம்** என்ற தீர்மானத்தை **பிஷப்** அவர்களும் **புதிய நிர்வாகிகளும்** கர்த்தருக்கு முன் தீர்மானிப்பார்களாக.

பொதுவாக **அனைத்து** CSI **டையோசிஸ்களிலும்** கோர்ட்டுக்கும், **வக்கீல்களுக்கும்** செலவழித்த கணக்கை கீழே தருகிறேன், **எத்தனை கோடிகள்** அனாவசிய செலவுகளாக செலவழித்து **கர்த்தருடைய பணத்தை வீணடித்துள்ளார்கள்** என்பதை அனைத்து CSI டையோசிஸ் மக்களும் அறிந்துகொள்வது அவசியம்.

(ROC and Income Tax Department) 2014 -2019 வரை வருமான வரித்துறைக்கு தாக்கல் செய்யப்பட்ட CSITAவின் வருடாந்திர நிதி நிலை அறிக்கை

***வக்கீல்களுக்கு கொடுத்த கட்டணங்கள் மட்டும்***

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 - 2015 | Rs. | 9,31,97,197 | 00 | (ரூபாய் கோடிகளில்) |
| 2015 - 2016 | Rs. | 11,04, 54,136 | 00 | |
| 2016 - 2017 | Rs. | 12,99,96,312 | 00 | |
| 2017 - 2018 | Rs. | 10,96,54,348 | 00 | |
| 2018 - 2019 | Rs. | 12,73,06,096 | 00 | |

கடந்த **ஐந்து ஆண்டுகளில்** சட்ட ரீதியான செலவுகள் மட்டும் மொத்தம் Rs.57,06,08,089 **(ஐம்பத்து ஏழு கோடியே** ஆறு லட்சத்து எட்டாயிரத்து என்பத்து ஒன்பது மட்டும்)

மாதந்தோறும் **நீதிமன்ற செலவுகள்** மட்டும் Rs. 95,10,134 செலவழிக்கப்பட்டது இதுபோக **கல்லூரிகள் பள்ளிக்கூடங்களின்** செலவுகள் தனி

**நீதிமன்ற** மற்ற செலவுகள் (நீதிமன்றத்தின் வருடத்துக்கு **இரண்டு மாத** விடுமுறை தவிர்த்து) **தொழில்முறை கட்டணங்கள்** மாதாந்திர சராசரி தொகை 1,14,12,161, நம் CSI சபை **தலைவர்கள்,** செயலர்கள் **நிர்வாகிகள்** இவர்கள் யாவரும் **செய்த தவறுகளுக்கு** சபை மக்களாகிய நாம் சாப்பிடாமல் **உபவாசம் இருந்து** சேமித்து ஆலயத்தில் அளித்த காணிக்கை எப்படியெல்லாம் வீனடித்துள்ளார்கள் பார்த்தீர்களா? இவைகளை கேள்வி கேட்பார் யாரும் இல்லையா?

பொய்யான **அற்புத சுகமளிக்கும்** ஊழியங்களை **உண்மையான ஊழியம்** என்று நம்பி **லட்ச லட்சமாக** பணத்தை கொண்டுபோய் கொட்டுகிறார்கள்.

இனிமேலாவது மேலே குறிப்பிட்ட பொய் ஊழியங்களை ஊக்குவிக்காமல் நம் **பாரத** தேசத்தில் பதவியை விட்டு, குடும்பத்தைவிட்டு பிரிந்து, **படுக்க வசதியில்லாத** குடிசையில் வாழ்ந்து **மருத்துவ உதவி** கிடைக்காத காடுகளில் **இயேசுவே இரட்சகர்** என்று அறிவிக்கும் **மிஷனரிகளுக்கும் மிஷனரிகளின் பிள்ளைகளின்** படிப்பு, **திருமண செலவு ஆகியவற்றிக்கு மிஷனரி ஸ்தாபனம்** மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்புங்கள், **அதில்தான் கர்த்தர்** மகிமைப்படுவார். உங்கள் வருமானத்தையும் ஆசீர்வதிப்பார்.

**சுகமளிக்கும் ஊழியம்** செய்பவர்கள், **ஜெபத்தில் பொய்யாய்** பெயர்களையும் **வியாதிகளையும்** குறிப்பிட்டு செய்யும் ஊழியர்கள் **கிருஸ்தவர்களை** ஏமாற்றுகிறார்கள், அவர்கள் கௌரவதற்காகவும் **பெயருக்கு** இந்தியாவில் நாங்களும் **மிஷனரிகளை** அனுப்பி மிஷனரி ஊழியம் செய்கிறோம் என்று பொய் அறிக்கைகளை தங்கள் **பத்திரிகை** மூலமாகவும் TV நிகழ்ச்சிகள் மூலமாகவும் **பொய் சாட்சிகளை** எழுதுகிறார்கள். வஞ்ஜிக்கப்படாதிருங்கள். **செய்யதக்கவர்களுக்கு செய்யுங்கள்** என்று வேதம் போதிக்கிறது.

நெல்லை CSI திருமண்டலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட **நிர்வாகிகளையும்** புதிய **பிஷப் அவர்களையும்** வாழ்த்துகிறேன். **புதிய நிர்வாகத்தில்** பழிவாங்குதல் இல்லாமல் **புதிய பிஷப்** அவர்கள் தவறான காரியங்களுக்கு துணைபோகாமல், அவர்களுக்கு பயப்படாமல் **தெய்வ பயத்தோடு** திருமண்டலத்தின் முதல் இந்திய **பிஷப் அசரியா** அவர்கள் நிர்வாகம்போல, இந்த **ஜாமக்காரனில்** ஆயர் அவர்கள் தன் கடிதத்தில் குறிப்பிட்ட காலம் சென்ற **பிஷப் டேனியேல் ஆபிரகாம், பிஷப் ஜெபராஜ்** அவர்களைப்போல **பண ஆசையில்லாமல்** வாழ்ந்து **பிஷப்** அவர்கள் தன் நிர்வாகத்தில் **லே செயலரோ,** மற்ற நிர்வாகிகளோ தலையிட அனுமதிக்காததைப்போல அவரவர்களுக்கு கொடுக்கப்பட்ட பொருப்பை பதவியாக கருதாமல் ஊழியமாக கருதி தங்கள் பணியை நிறைவேற்றும்படி பணிவாக கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இனி எந்த பிரச்சனைக்கும் **நீதி மன்றத்துக்கு** போகாமல் **எல்லாரும் அமர்ந்து** பிரச்சனைகளை **பேசி தீர்த்துக்கொள்ளுங்கள், கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடு இருப்பதாக.** குறிப்பாக **புதிய நிர்வாகிகள் புதிய பிஷப்பை** பெற்றிக்கிற **திருநெல்வேலி** CSI **டையோசிஸ்** சபைகளில் உள்ள அனைத்து **அங்கத்தினர்களுக்கும் வாழ்த்து கூறி** என் ஆசிரியர் குறிப்பை முடிக்கிறேன். ஜெபிக்கிறேன்.

**Dr. புஷ்பராஜ்** (ஜாமக்காரன்)

☐ வாசகர்கள் யாவரும் ஜாமக்காரன் ஊழியங்களுக்காக அனுப்பிய காணிக்கைகள் M.O., D.D., காசோலை NEFT, Online பணமாற்றம் செய்து நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் மாதம் தவறாமல் கிடைக்கிறது. யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

☐ வாசகர்களின் குடும்பத்துக்காக தினசரியும் மாதம் இரண்டு முறையும் நான் செய்யும் உபவாச ஜெபங்களிலும் வாசகர்களுக்காக ஜெபிக்கிறேன்.

# முன் மாதிரியுள்ள பிஷப்




Rt. Rev. **டேனியேல் ஆபிரகாம்**

**திருநெல்வேலி** CSI டையோசிஸில் **முன்மாதிரியுள்ள** பிஷப் Rt. Rev. **டேனியேல் ஆபிரகாம்** Rt.Rev. **ஜெபராஜ்** ஆகியவர்களைப்பற்றி இரட்சிப்பின் அனுபவம் பெற்றவரும் ஓய்வுபெற்றவருமான ஒரு ஆயர் அவர்கள் எழுதிய கடிதத்தை வெளியிடுகிறேன்.

---

**குறிப்பு :** கடந்த ஜாமக்காரனில் பிஷப் பணிக்காக **தேர்தலில்** நிற்கவுள்ள **ஆயர்களுக்கு** வேத புஸ்தகம் கூறும் **தகுதிகளைப்பற்றி** எழுதியிருந்தேன். அதை வாசித்த பலர் தங்கள் அபிப்ராயங்களையும் **விமர்சனங்களையும்** எனக்கு எழுதினார்கள். அதில் தகுதியானதாக தெரிந்தெடுக்கப்பட்ட **நெல்லை ஆயர்** அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறேன். புதிதாக தெரிந்தெடுக்கப்படும் **பிஷப்மார்கள்** யாராயிருந்தாலும் அவர்கள் கீழே வாசிக்கும் முன்மாதிரியாக வாழ்ந்த பிஷப்மார்களின் செயல்களை பின்பற்றினால் CSI திருமண்டலம் அல்லது லூத்தரன் சபைகள் **சண்டை** சச்சரவுகள் இன்றி **நீதிமன்றம், வக்கீல்** என்று அலையாமல் மக்கள் காணிக்கையை வீணடிக்காமல் **பிஷப்மாரும்** சபைகளும் நிம்மதியாக **சமாதானத்துடன்** கர்த்தரின் கட்டளைகளை நிறைவேற்றி ஆராதிக்கலாம்.



Rt.Rev. **ஜெபராஜ்**

---

To

**Dr. Pushparaj** அவர்கள்,

**ஜாமக்கரன்** ஆசிரியர், சேலம்

அன்புள்ள ஐயா,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

தாங்கள் **கொரோனா** தொற்றினால் பாதிக்கப்பட்டீர்கள் என்று கேள்விப்பட்டபோது

என்னால் நம்ப முடியவில்லை. திட்டமாக அறிந்தபின்னரே உங்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தோம். இப்போது உங்களுக்கு தேவன் கொடுத்த நல்ல சுகத்திற்காக கர்த்தரை துதிக்கிறோம். நீங்கள் எழுதிய உங்கள் கட்டுரையில் சேலத்தில் உள்ள சபையின் **தேர்தல் வாக்காளர் லிஸ்டிலிருந்து உங்கள் பெயரையே ஆயர் அவர்கள்** நீக்கியதை அறிந்து அந்த ஆயரின் செயலுக்காக வெட்கப்படுகிறேன்.

ஒரு காலத்தில் **சகோ. சுசி பிரபாகரதாஸ்** (சத்திய வசனம் பேச்சாளர்) அவர்கள் **ஸ்ரீவைகுண்டத்தில்** உள்ள CSI சபையில் இருந்தபோது அவர் சபையின் **தேர்தல்** சமயத்தில் அவர்கள் பேரில் **முட்டை ஏலம் எடுத்த பணம் பாக்கியுள்ளது** என்று சபையில் தெரிவித்தார்களாம். அதற்காகதான் **வேட்பாளர் லிஸ்டிலிருந்து** அவர் பெயர் நீக்கம் செய்யப்பட்டது என்றும் அறிவித்தார்களாம். அதற்கு **சகோதரன் அவர்கள்** நான் **முட்டையே சாப்பிடுவதில்லையே ! எப்படி நான் முட்டையை ஏலம் எடுப்பேன்,** அது **உண்மைக்கு மாறானது** என கூறினார். அதை அவர் **ஆயராகிய** என்னிடம் தெரிவித்தார்கள். ஒன்று **தவறாகவும்** அவர் பெயர் பணபாக்கி லிஸ்டில் எழுதியிருக்கலாம், அல்லது **வேண்டு மென்றேயும்** செய்திருக்கலாம்.

**சபை தேர்தலில்** பல சபைகளில் வேண்டுமென்றே இப்படிப்பட்ட பிரச்சனைகளை சிலர் உண்டாக்குவார்கள். இவர்கள் யாவரும் **தெய்வ பயம் அற்றவர்கள்.** உங்கள் சேலம் சபையில் **தேர்தல் சமயம் ஆயரால்** வேண்டுமென்றே **சிலரின் தூண்டுதலால்** மட்டுமே அந்த தவறு நடந்திருக்கலாம். உங்களைப்பற்றி அந்த **ஆயர்** சிறு பையனாக இருந்தபோதே உங்களை அறிவார். அப்படியிருக்க ஏதோ உள் நோக்கத்தோடுதான் உங்கள் பெயர் நீக்கம் நடந்திருக்கிறது.

**திருநெல்வேலி திருமண்டலத்தில்** 1975ம் ஆண்டில் **உதவி குருவாக** எனது ஊழியம் ஆரம்பமாகி **பாளையம்கோட்டை** ஹைகிரவுண்ட் CSI சபையில் கர்த்தருடைய கிருபையால் எவ்வித பிரச்சனையும் இன்றி என் **ஆயர் ஊழியத்தை** நிறைவேற்றி மிகுந்த சமாதானத்துடன் **ஊழியத்தை முடித்து ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்**. நான் என் **ஆயர்** ஊழிய அனுபவத்தில் நான் அறிந்தமட்டில் **திருநெல்வேலி திருமண்டலத்தில்** பிஷப் **டேனியல் ஆபிரகாம்** ஐயா33 அவர்களது ஊழியம் முன்மாதிரியுள்ளது ஆகும். அவர் காலத்து ஊழியங்களைக்குறித்து நான் தங்களுக்கு எழுதி அறிவிப்பது இன்றைய சூழ்நிலையில் அவசியம் என்று கருதுகிறேன்.

1) பிஷப் **டோனியல் ஆபிரகாம்** அவர்கள் காலத்தில் குருமார்கள் **பிஷப் ஐயா** அவர்களை பங்காளாவில் சென்று சந்திக்கும் வேளையில் CASSOCK **அங்கி** அணியாமல் செல்லக்கூடாது என்பது அவரின் கட்டளை.

2) Pastoral Ministry Register ஒன்றை **ஓராண்டுக்கு தயாரித்து** வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஆயர்கள் **சபையார் வீடுகளை** கட்டாயம் சந்தித்து **ஜெபித்து** வரக் கட்டளையிட்டார்கள். நாங்கள் சந்திக்கிற **குடும்பத் தலைவர்களின்** பெயர்களை அந்த **ரிஜிஸ்டரிலும்** எழுதவேண்டும். மேலும் அதனை **நகல் எடுத்து** பிஷப்புக்கு அனுப்ப தனித்தனி Sheetsகளும் எங்களுக்கு தந்திருந்தார்கள். **ஒவ்வொரு** மாதமும் முடிந்தவுடன் அந்த சீட்டில் சபையார் வீடுகளை சந்தித்த விவரங்களை எழுதி பிஷப் ஐயா அவர்களுக்கு அனுப்பிவிடவேண்டும். அதுமட்டுமல்ல அந்த **சீட்டில்** நாங்கள் எங்கள் தனி **தியானத்திற்காக** செலவழித்த நேரம் என்ன? **பைபிள்** சமபந்தமான என்னென்ன **புஸ்தகங்களை** நாங்கள் வாசிக்கிறோம் என்பதையும் அதில் குறிப்பிடவேண்டும். அதனால் அன்றைய காலத்தில் டையோசிஸ்ஸில் **வீடு** சந்திப்பு **தவறாமல்** நடைபெற்றது. அநேகமாக **ஆயர்கள் யாவரும்** சாயந்திர வேளையில் **வீடு சந்திப்பில்தான்** இருப்போம்.

3) அதேபோல் Daily Cash Book ஒன்றை புதிதாக ஓராண்டு காலத்துக்கு அல்லது அதற்கு மேலாகவும் தயாரித்து அதன் **நகல்** தனி பேப்பரில் எழுதி பிஷப் அவர்களுக்கு அனுப்ப நிறைய பேப்பர்களையும் எங்களுக்கு இலவசமாக தந்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் Daily Cash Book கண்டிப்பாக எழுதவேண்டும. மாதம் முடிந்ததும் அப்படியே எழுதி பிஷப் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். Pastorate Main Cash Bookஐ **சேகர ரைட்டர்** எழுதி முடிப்பார். நாங்கள் Daily Cash Book எழுதுவோம். மாத முடிவில் கணக்குகள் முடிக்கும்போது **இரண்டு புஸ்தக** கணக்குகளும் **ஒன்றுபோல்** இருந்தால் **கணக்குகள் சரியே.** பிஷப்பின் இந்த ஏற்பாடு **கணக்கு விஷயத்திலும்** பணத்திலும் **நேர்மையாயிருக்க எல்லாருக்கும் அதிக உதவியாயிருந்தது.**

4) **3 மாதங்களுக்கு ஒருமுறை** முதல் வெள்ளிக்கிழமை சேகர **கஸ்பா சபையில்** காலை 6 மணிக்கு **பரி நற்கருணை** ஆராதனை நடத்தி அதனை தொடர்ந் து **மாலை 6 மணி வரை** ஆலயத்தில் **ஆயர்களும் ஊழியர்களும்**, சபையாரும் **உபவாசித்து** திருமண்டலத்தின் மறுமலர்ச்சிக்காகவும் **தேசத்தின் எழுப்புதலுக்காகவும்** ஜெபிப்போம். **கிளைச் சபைகளின்** சபை ஊழியர்கள் அநேகமாக **பள்ளியில் பணிபுரியும்** ஆசிரியர்களாக இருப்பார்கள். வெள்ளிக்கிழமை பள்ளி வேலை நாள் தான். என்றாலும் **ஆலயம் திறந்து வைக்கப்பட்டு** சபையார் தனித்தனியாகவோ. குழுவாகவோ **கூடி ஜெபிக்க** ஏற்பாடு செய்திருந்தார்கள். சில வேளையில் **பிஷப் ஐயா** அவர்கள் எதிர்பாராவிதமாக நேரில் வந்து ஆலயம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறதா? **குருமார்கள்** ஆலயத்தில் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்களா? அல்லது வேறு வேலையாக

பாளையங்கோட்டை எங்கும் சென்றுவிட்டார்களா? என அறியவும் பிஷப் அவர்கள் நேரில் வருவார்கள். அதே சமயம் பிஷப் அவர்களும் எங்களோடு இணைந்து ஜெபித்து செல்வார்கள்.

5) **ஜெப மலர்** என்ற சில பக்கங்கள் கொண்ட ஜெப புஸ்தக குறிப்பை பிஷப் அவர்கள் எழுதி வெளியிட்டு **ஒவ்வொரு நாள் இரவிலும்** சுமார் 9 மணியளவில் **சபையார்** அவரவர் வீட்டில் இருந்தவண்ணமாக ஜெபிப்பதற்கு வசதியாக ஊழியர்கள் **ஆலய ஒலிபெருக்கி** மூலம் சபையின் மக்கள் கேட்கத்தக்கதாக அந்த ஜெப மலரில் உள்ள **ஜெபக்குறிப்புகளை** வாசித்து சபை மக்கள் ஜெபிக்க ஒழுங்கு செய்திருந்தார்கள். பொதுவாக SPG ஆலயங்களில் **தினசரி இரவில்** 9 மணிக்கு மணி அடிப்பார்கள். அது எதற்காக என்றால் மணி அடிக்கும் அந்த நேரத்தில் **குடும்ப ஜெபம்** செய்யவேண்டும் என்பதை ஞாபகப்படுத்தி அந்த மணி ஒலிக்கப்படும். அதனால் **இரவு குடும்ப ஜெபங்கள்** அநேக வீடுகளில் தவறாமல் நடைபெற ஆரம்பித்தன.

6) பிஷப் ஐயா அவர்களும் அடிக்கடி **பாளையங்கோட்டை** கண் தெரியாதவர் பள்ளியில் தன்னுடைய **தனி ஜெபத்திற்காக** அதுவும் **சைக்கிளிலேயே** சென்றுவிடுவார்கள் எனவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

7) ஏற்கனவே ஒருமுறை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். கஸ்பா சபை மட்டுமல்ல, கிளை சபைகளையும் ஆயர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் வீடுகளை சந்தித்து ஜெபித்து, அந்த கிராமத்தில் **இரவு ஆராதனை** நடத்தி, **ஒரு செய்தி** கொடுத்து ஜெபக்குழுபோல நடத்திவர வேண்டும், அந்த ஜெபக்குழுக்களில் மக்கள் பலர் மனமுடைந்து அழுது ஜெபிக்கிறவர்களும் உண்டு. அந்த ஜெபங்கள் **ஊழியர்களாகிய எங்களுக்கும்** எழுப்புதலாக இருந்தன. மேலும் ஒவ்வொரு சபையனரும் மாதந்தோறும் **சுவிசேஷ ஊழியம்** கண்டிப்பாக செய்ய வேண்டும். எனவும் வலியுறுத்தினார்கள்.

## வெளி மாவட்ட சுவிசேஷ ஊழியம்

8) **வெளி மாவட்ட நற்செய்தி** பணி என்ற ஊழியத்தை ஆரம்பித்ததே **பிஷப் டேனியல் ஆபிரகாம்** ஐயா அவர்கள் தான். அப்போது **10 நாட்கள்** வெளி மாவட்டத்திலுள்ள பிஷப் அல்லது ஆயர்களுடன் தொடர்பு கொண்டு. அங்குள்ள **கல்வி ஸ்தாபனங்களில்** ஆயர்கள் அனைவரும் **தங்குவதற்கு** வேண்டிய காரியங்களை செய்தார்கள். **இரண்டு பஸ்களில்** ஆயர்களும் **பிஷப் அவர்களும்,** சில பெண்களுமாக அந்த ஊழயத்துக்கு சென்று அந்த ஊரின் **சுற்றுவட்டார** கிராமங்களில் **சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது**. யார் யாரை

சந்திக்கிறோமோ, அவர்களிடம் பாரங்கள் தருவார்கள், அதில் அவர்கள் **பெயர்,** என்ன காரியத்துக்காக **ஜெபிக்க வேண்டும்** என்ற **விபரங்களை** எழுதி ஜெபிக்க எடுத்துக்கொள்வோம். பின் அந்தந்த **திருமண்டல பேராயர்** அவர்களிடம் நாங்கள் சந்தித்த கிராமங்களில் பின் தொடர் ஊழியம் செய்யவும் பிஷப் டேனியேல் அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். அந்த **10 நாட்களுக்கும்** பிஷப் ஆபிரகாம் ஐயா அவர்கள் **மக்களோடு மக்களாக** அந்த **கல்வி ஸ்தாபனத்திலேயே** ஆயர்களாகிய எங்களோடே தங்குவார்கள். அந்த ஊரில் உள்ள எந்த **லாட்ஜ்ஜிக்கும் பிஷப் அவர்கள்** ஆயர்களைவிட்டு தான் மட்டும் தங்குவதற்கு சென்றதேயில்லை. அந்த 10 நாட்களும் நெல்லை திருமண்டலத்தில் **பேராயர் அவர்கள் பணி கிடையாது.** அப்படி எல்லா விஷயத்திலும் பிஷப் டேனியேல் ஆபிரகாம் **முன்மாதிரியாக** இருந்தார்கள். வெளி நாடுகளுக்கும் அதிகமாக அவர்கள் அடிக்கடி சென்றதும் இல்லை.

9) **குருமார்கள்** தியானக்கூட்டம் திருநெல்வேலி திருமண்டலத்திலுள்ள Deaf & Dum **மேல் நிலைப்பள்ளில்** லெந்து நாட்களில் **நடைபெறும்.** சைவ சாப்பாடாகத்தான் இருக்கும். **உணவு அருந்தும் வேளையில்கூட** எல்லாரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே ஒரு **குருவானவர்** ஒரு விசேஷ தியான **புஸ்தகத்தை** வாசிக்க யாரும் **பேசாமல் அமைதியாய்** கவனித்துக்கொடிருக்க வேண்டும். அவ்வளவு **பக்தி விநயமாக** குருமார் கூட்டம் நடைபெற்றது.

10) **மூக்குபீறி** சபையில் **Dr. புஷ்பராஜ்** ஆகிய நீங்கள் நடத்தின **உபவாச ஜெபத்திற்குக்கூட பிஷப் டேனியேல் ஆபிரகாம்** ஐயா அவர்கள் **தலைமைதாங்கி** நடத்தினார்கள் என்பதை நான் அறிவேன்.

11) திருமண்டல (டையோசிஸ்) **கன்வென்ஷன் கூட்டம்** பாளையங்கோட்டை சாராள் டக்கர் மேல்நிலைப்வபள்ளி **வளாகத்தில்தான்** நடைபெறும். Dr. புஷ்பராஜ் ஆகிய **நீங்களும்** அதே இடத்தில் நடத்தின **இரண்டு கன்வென்ஷன்** கூட்டத்திலும் ஆயராகிய நான் பங்கு பெற்றிருக்கிறேன். பொதுவாக கன்வென்ஷன் நாட்களில் காலை **வேத ஆராய்ச்சிக்** கூட்டம் நடைபெறும். அதில் **பிஷப் ஆபிரகாம்** ஐயா அவர்கள் **மேடையில் அமராமல்** ஜனங்களோடுகூட அமர்ந்திருப்பார்கள். **ஆரம்ப**முதல் **இறுதி** வரை அமர்ந்திருப்பார்கள். எந்த ஜெப கூட்டமாக இருப்பினும் **ஆரம்ப ஜெபம்** செய்துவிட்டு வேறு இடங்களுக்கு செல்லாமல் **கடைசிவரை அந்த கூட்டத்தில் பங்கு பெறுவார்கள்.**

12) திருமண்டலத்திலுள்ள அனைத்து **குருமார்களின் குடும்பங்களையும்** நன்கு அறிந்தவர்கள், **நல்ல ஞாபகசக்தி** உள்ளவர்கள். மே மாதத்தில் **குருமார்கள்,**

**ஆசிரியர்கள் பணியிட்டமாறுதல்** செய்ய நேரிட்டால் **குருமார், பிள்ளைகளின் படிப்பு வசதிக்கு** ஏற்றபடியும் **ஆசிரியர்களின் குடும்பங்கள்**. பாதிக்காதபடி அவர்களை **இட மாறுதல்** செய்தார்கள். இடைக் காலத்தில் (Transfer) **மாறுதல்** என்பதே இராது. இனி அடுத்த **மே** மாதம்தான் அடுத்த பணியிட மாற்றம் இருக்கும். அப்படி நன்மை செய்தவர்கள்.

13) திருமண்டல **நியமனங்களும்** வரிசைக்கிரமாகவே நடைபெற்றன. திருமண்டலத்தின் ஏழைகளும் இருப்பார்கள். ஆகவே திருமண்டலத்துக்கு **நன்கொடைகளை** அவர்களிடம் வாங்கமாட்டார்கள், நிர்வாகத்தில் உள்ள **மற்றவர்களையும்** வாங்க விடமாட்டார்கள். அந்த பிஷப் ஐயா காலத்தில் நிர்வாக விஷயத்தில் **யாரும் அனாவசியமாக தலையிட முடியாது.**

14) Spritual Ministration & Dio-Administration இரண்டையும் சரியாக நடத்தின **ஆளுந்திறமை வாய்ந்த அந்த பிஷப்** அவர்கள் காலத்தில் நடந்த **திருமண்டலத்தின்** 200வது ஆண்டு விழாவின்போது 600 **போர் புதிதாக** இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு **தாமிரபரணி** ஆற்றில் முழுகல் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். **திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றில்** அவர்களுக்கு **முழுக்கு ஞானஸ்நானம்** கொடுத்தார்கள்.

15) திருமண்டல **கவுண்சில் கூட்டம்** நடைபெறும்போது கதீட்ரல் மேல்நிலைப்பள்ளியில் தான் தங்கவேண்டும். அதனால் பரி நற்கருனை ஆராதனையில் அனைவரும் பங்குகொள்வார்கள். அவர்கள் காலத்தில் எல்லாம் **கண்டிப்பாகவும் அன்போடும்** நடைபெறும். பிஷப் அவர்கள் **எல்லாருக்கும் முன்மாதிரியாகத்** திகழ்ந்தார்கள். அவர் காலத்தில் நடந்த எல்லா தேர்தலும் அமைதியாக நடந்தன. எவ்வித தேர்தல் **பரப்பரப்பும்** இருந்ததில்லை. பிஷப் அவர்களின் ஊழியத்திற்குப்பின் அடுத்த பிஷப் தேர்தெடுப்பதற்காக கதீட்ரல் அத்தியட்சாதினத்தில் எப்பொழுதும் **சபையார் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.**

16) **குருமார்களை** ஊழியத்துக்காக நடக்கும் தெரிந்தெடுப்பில் யாரும் யாரையும் **சிபாரிசு செய்யக்கூடாது** என்பது **சட்டமாக** இல்லாவிட்டாலும். அவர் காலத்தில் ஓர் **நல்ல ஒழுங்கு முறை** இருந்து வந்தது. ஆனால் தற்போது நடந்த தேர்தலில் **பேராயராக** நிற்கும் குருமார்களான **வேட்பாளர்களே ஓட்டு சேகரிக்கச்சென்று**விடுகிறார்கள்.

17). பிஷப் ஆபிரகாம் ஐயா அவர்கள் காலத்தில் தான் திருமண்டலத்தில் அவர் பிஷப்பாக **பொறுப்பேற்றவுடனே** திருமண்டல பொருளாதார வளர்ச்சிக்காக Deposit Scheme & Reserve Fund என்ற புதிய திட்டத்தை ஏற்படுத்தினார்கள். ஒன்று குருமார்களிடத்திலும்

ஆசிரியர்களிடத்திலும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் **சம்பளத்தில் பிடித்து** ஓய்வு பெறும்போது அத்தொகைக்கான **வட்டியுடன் திரும்பி ஆயர்களுக்கு கொடுக்கப்பட்டது.**

18) பிஷப் ஆபிரகாம் ஐயா அவர்களின் ஊழிய ஆரம்ப காலத்திலேயே திருமண்டல Audit Sectionல் உள்ள அலுவலர்களை திடீரென **சேகர கணக்குகளை** சரிபார்க்க அனுப்பி வைப்பார்கள். கையிருப்பில் உள்ள பணத்தையும் காட்டுவோம். அதுவும் ஒரு நல்ல முன்மாதிரியான திட்டமே.

19) சேகரங்களில் பிஷப் ஐயா **திடப்படுத்தலுக்காக** வரும்போது சேகரத்திலுள்ள எல்லா **சபைகளின் ரிஜிஸ்டர்களும்** ஆயத்தமாக வைத்திருக்கவேண்டும். மற்றும் சேகர அலுவலகத்திலுள்ள முக்கியமான **பதிவேடுகளைப் பார்வையிட்டு** கையொப்பம் வைப்பார்கள்.

20) இவரைப்போலவே **பிஷப் ஜெபராஜ்** அவர்களைக்குறித்தும் எனது அருமை தகப்பனார் அவர்கள் இரண்டு காரியங்களைச் சொன்னார்கள். ஒன்று அவர்களது மகனுக்கோ. மகளுக்கோ. திருமணம் நடந்தது. பரி **விவாக அழைப்பிதலிலேயே வெகுமானங்களை** தயவுசெய்து யாரும் **கொண்டுவரவேண்டாம்** என்று அச்சடித்து இருந்தார்கள். அடுத்து அவர் ரெயில் பிரயாணத்தின்போது சபையில் முக்கியமானவர்களின் பெயர்களை வாசித்து ஜெபித்துக்கொண்டே செல்வார்கள். எத்தனை அருமையான சாட்சி

21) பிஷப் ஐயா **(டேனியேல் ஆபிரகாம்**) அவர்களின் ஊழியம் முடிந்தபின் அடுத்து வந்த **பேராயர்களின்** இறுதி இரு ஆண்டுகள் பெரும் **வீழ்ச்சிக்கு உள்ளானது.**

22) மகா கனம் **பேராயர் ஆபிரகாம் அவர்கள் ஓய்வு பெற்ற காலத்திலும்** டவுன் பஸ்ஸிலேயே பிரயாணம் செய்தார்கள்.


இப்போதைய **திருநெல்வேலி** CSI டையோசிஸ்ஸின் நிலை மிகவும் **சாட்சி** கெட்டு **அடிதடி** சண்டைகள் முற்றி **நீதிமன்றமே** திருநெல்வேலி CSI திருமண்டலத்தை பொருப்பெடுத்து **திருமண்டலத்திலுள்ள அனைத்து சபைகளிலும் தேர்தல் நடத்தி** முடித்து இப்போது **பிஷப் எலக்ஷனும்** பிரச்சனையில்லாமல் நீதிமன்றமே நடத்தி முடித்துவிட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**ஜாமக்காரன் குறிப்பு :**

திருநெல்வேலி **ஆயர்** அவர்கள் என் கடிதத்தில் குறிப்பிட்ட நல்ல சாட்சியுள்ள பிஷப் **Rt.Rev. டேனியல் ஆபிரகாம்** போல **கேரள மாநிலத்திலும்** நல்ல சாட்சியுள்ள **பிஷப்மாரை** நான் அறிவேன்.

# கேரளாவில் உள்ள முன்மாதிரியுள்ள பிஷப்

☐ **கிழக்கு கேரளா** CSI டையோசிஸ்ஸிலும் **Rt.Rev. மைக்கல் ஜான் பிஷப்** அவர்களின் **நிர்வாகமும்** வாழ்க்கையும், அவர் **ஆயர்களை** விசாரிக்கிற அவர் பன்பும் போற்றத்தக்கது. தென் இந்தியாவில் உள்ள டையேசிஸ்களில் **ஏழை ஆயர்கள், ஏழை சபை மக்கள் நிறைந்த CSI டையோசிஸ்** என்றால்அது கிழக்கு கேரளா டையோசிஸ் என்றால் மிகையாகாது.



Rt. Rev. Micheal John

**கேரளாவில் மத்திய கேரளா** CSI டையோசிஸ்ஸிலிருந்து **கிழக்கு கேரளா** டையோசிஸ்சை பிரித்துவிட்டபேது **வெருங்கையாக அனுப்பப்பட்டதுபோல** பிரித்துவிட்டனர் ஆயர்களுக்குகூட சம்பளம்கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் டையோசிஸ்ஸை பிரித்துவிட்டார்கள். **பிஷப்புக்கு** என்று **தனி வீடு** இல்லை. புதிய டையோசிஸ்க்காக அலுவலக கட்டிடம் கூட இல்லாத நிலையில் மிக பரிதாபமாக டையோசிஸ் கஷ்டம் அனுபவித்தது. **பிஷப் மைக்கேல் ஜான்** அவர்கள் **அரேபிய நாட்டில்** உள்ள CSI சபைகளையும், **அமெரிக்க நாடு, கனடா நாடு** ஆகிய நாடுகளில் வாழும் மலையாள **CSI மக்களின்** சபைகளை சந்தித்து **பிச்சை எடுப்பதுபோல** பணம் சேகரித்து **மேலுகாவு** என்ற மலை நகரத்தை டையோசிஸ்ஸின் **தலைமை இடமாக** ஏற்பாடு செய்து முதலில் **அலுவலகத்தையும்,** மேஜை நாற்காலிகளையும் புதிதாக செய்து கட்டிடங்களையும் கட்டி முடித்தபின்தான் பிஷப் அவர்கள் தான் குடியிருக்க **பிஷப் வீட்டை** ஆடம்பரம் இல்லாமல் கட்டினார்.

பிஷப் **மைக்கேல் ஜான்** அவர்கள் நல்ல **கன்வென்ஷன் செய்தியாளரும்** பிரசங்க தாலந்தும் பெற்றவர், **கேரளா எங்கும்** என்னைப்போல் **மார்தோமா, CSI சபைகளின் கன்வென்ஷன்களில்** அவரும் அழைக்கப்பட்டு பிரபலமானார். **நானும் பிஷப் அவர்களும்** பல இடங்களில் ஒன்றாக ஒரே அறையில் தங்கி பிரசங்கித்து இருக்கிறோம். அவருடைய ஜீவியம், நிர்வாகம் குறை கூற முடியாதபடி அவர் தன் **ஊழியத்தை நிறைவேற்றி** முடித்து கர்த்தருக்குள் மரணமடைந்தார்.

**முன்மாதிரியுள்ள** பிஷப் Rt. Rev. பிஷப் மைக்கல்ஜான் அவர்களின் வாழ்க்கைகாக தேவனைத் துதிக்கிறேன்.

# பிஷப் ஜேசுதாஸ்

**தெற்கு கேரளா** CSI டையோசிஸ்ஸில் பிஷப் **ஜேசுதாஸ்** அவர்கள் **பிஷப்பாக** தெரிந்தெடுக்கப்பட்டு **மிக நல்ல பெயர்** எடுத்தார். கர்த்தர் அவரை முழு தென் இந்திய திருமண்டலங்களில் மிக உயர்ந்த **பதவியான மாடரேட்டர்** பதவியில் கர்த்தர் அவரை உயர்த்தினார். Dr. புஷ்பராஜ் ஆகிய என் **46 வருட ஊழியத்தில்** தென் இந்தியாவில் உள்ள **24 CSI டையோசிஸ்களிலும்** உள்ள சபை மக்களாலும், பிஷப் ஆயர்களாலும் மிகவும் **மதிக்கக்கூடிய மாடரேட்டராக** பிஷப் ஜேசுதாஸ் அவர்கள் திகழ்ந்தார்.



Modarater Most Rev. **I. J ESUDASS**

எளிமையான சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்த பிஷப் & மாடரேட்டருமாகிய **MostRev.ஜேசுதஸ்** அவர்களை **Dr. புஷ்பராஜ்** ஆகிய நானும் மிகவும் மதிக்கிறேன். கேரளத்தில் **திருவனந்தபுரம்** மாவட்டத்தில் என் கூட்டம் எங்கு நடந்தாலும் அங்கு சில இடங்களில் **என் பிரசங்கம்** கேட்கவே எதிர்பராத **விருந்தாளியாக** வந்து மேடையில் **அமருவார்.** கூட்டம் முடந்தவுடன் எனக்கு நல்ல **நண்பராக** என் ஊழியத்தையும் **என் குடும்பத்தையும்** விசாரிப்பார்.

நான் சென்று பிரசங்கித்து வந்த 24 டையோசிஸ்களின் ஆவிக்குறிய **நிலைகளைப்பற்றி** என்னிடம் விசாரிப்பார். நான்கு முறை அவர் வீட்டுக்கு என்னை அழைத்து உணவளித்து உபசரித்தார். அவர் ஓய்வுபெறும் நிலையில் **மாடரேட்டர்** அவர்களின் மனைவி மரித்துப்போனவுடன் **தான் குடியிருக்கும்** சொந்த பங்களாவை **தெற்கு கேரளா** CSI **டையோசிஸ்க்கு** இலவசமாக ஊழியத்துக்காக என்று **எழுதி கொடுத்து** சில மாதங்களில் அவர் கர்த்தரின் பாதம் போய் சேர்ந்தார்.

இன்றைக்கும் இன்னும் **பல டையோசிஸ்களில்** அவர் உருவ படத்தை **பிரேம் செய்து** அவரைக் குறித்து பின் சந்ததிக்கு கூறி அவர் **நல்ல ஜீவியத்தை** குறித்து புகழ்ந்து பேசுவார்கள்.

அவர் **ஜீவியத்துக்காக,** சாட்சியுள்ள **வாழ்க்கைக்காக** கர்த்தரை நான் துதிக்கிறேன்.

**கர்நாடகா** மாநிலத்திலும் சாட்சியுள்ள எளிமையான **பிஷப் சாமுவேல்** என்பவர் **நல்ல சாட்சியோடு** இப்போதும் கர்னாடகா டையோசிஸ்ஸை நிர்வாகம் செய்கிறார்.

ஆந்திர மாநில CSI டையோசிஸ்ஸிலும் ஒரு பிஷப் மிகவும் சாட்சியுடனும் கண்டிப்புடனும் டையோசிஸ்ஸை நடத்தினார். டையோசிஸ்ஸில் பணம் கையாடல் செய்தவர்களை பதவியிலிருந்து நீக்கினார். அதனால் டையோசிஸ்ஸில் சில நிர்வாகிகள் இந்த பிஷப் இருக்கும் வரை டையோசிஸ்ஸில், சபைகளில், கல்லூரிகளில் எந்த கட்டிட காண்ட்ராக்ட் தங்களுக்கு கிடைக்காது என்று உறுதியானதால் பிஷப் அவர்களை அவர் தன் மனைவியோடு வேறொரு இடத்துக்கு தன் காரில் பயணம் செய்தபோது நடுரோட்டில் காருக்கு பெட்ரோல் ஊற்றி கொலை செய்துவிட்டனர். பிஷப் அவர்களின் சாட்சியுள்ள பண விஷயத்தில் கை சுத்தமள்ள பிஷப் அவர்களுடைய முன் மாதிரியுள்ள பிஷப் ஊழியத்தின் வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.

## சாட்சியில்லாத பிஷப்மார்

இப்படிப்பட்ட முன் மாதிரியுள்ள பிஷப்மார்கள் மத்தியில் **சாட்சியிழந்த பிஷப்மார்கள்** இன்றும் வாழ்கிறார்கள். **நெல்லை** பிஷப் J.J. **கிறிஸ்துதாஸ்** அவர்கள் **இரண்டு ஆதா**ர் அட்டைகளை வைத்து தன் பள்ளிக்கூட **சர்ட்டிபிகேட்டில் பிறந்ததேதி** மற்றும் **வருடத்தை** திருத்தி இரண்டு வ**ருடம் கூடுதலாக** பதவி விகித்து கடைசியில் அந்த திருட்டை கண்டுபிடித்து CSI சினாட் அவரை அழைத்து **போலீஸ்க்கு** அறிவிக்கவேண்டுமா? அல்லது **நீங்களாக பதவி விலகுகிறீர்களா** என்று பேசி அவரை அவமானப்படுத்தாமல் முறையாக **ஓய்வு** பெற வைத்தார்கள், இப்போதும் எந்த சபையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் வாழ்கிறார்.

அப்படியே **மெட்ராஸ் CSI டையோசிஸ் பிஷப் அசரியா** என்பவர் தன் **பாஸ்போர்டின் பிறந்த நாள் தேதியையும் வருடத்தையும்** திருத்தியதால் அகப்பட்டுக்கொண்டார். விவரம் அறிந்த **விமான நிலைய** அதிகாரிகள் விமானத்தில் ஏற அவரை அனுமதிக்கவில்லை. **மத்திய அரசு** CBI அதிகாரிகளை அனுப்பி விசாரனை நடத்தி **கைது செய்ய வந்தனர்.** அதற்குள் அவர் **ஞானஸ்நான சர்ட்டிபிகேட்டை** பாஸ்போர்ட்டுக்கு ஏற்றார்போல் பழைய மக்கிய பேப்பர் ஒன்றை தயாரித்து **ஞானஸ்நான சர்டிபிகேட்டை திருத்தினார்.**

**மெட்ராஸ் CSI டையோசிஸ்ஸில்** ஓய்வுபெற்ற **Rt.Rev. சுந்தர்கிளர்க்** அவர்கள் தன் **டெல்லி மந்திரிகளிடம்** தனக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி பிஷப் அசரியாவை

கிரிமினல் கேஸில் பிஷப் **ஜெயலுக்கு போவதை தடுத்து உதவினார்.** பிஷப் அசரியா அவரும் **மதிப்பிழந்து** மானம்போய் இப்போது **மரித்தும் போனார்.**

## பிஷப் துரை மாணிக்கம்

**கோயமுத்தூர்** CSI டையோசிஸ் **பிஷப்** Rt. Rev. துரை மாணிக்கம் அவர்கள் பலகோடி ரூபாய்களை **ஊட்டி** CSI கல்லூரியிலிருந்து கொள்ளையடித்ததாக கைது செய்யப்பட்டு **ஜெயிலுக்கு** சென்று அதன்பின் **பிஷப் பதவிலிருந்து** CSI சினாட் அவரை டிஸ்மிஸ் செய்தது. இந்தியாவிலேயே C.N.I. & C.S.I. டையோசிஸ்களில் பிஷப் பதவியில் இருக்கும்போதே **பிஷப் பதவியிலிருந்து** டிஸ்மிஸ் செய்யப்பட்டவர். இவர் ஒருவர் மட்டுமே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்ற பெயரோடு **இப்போதும் உயிரோடு வாழ்கிறார்.**


**CSI டையோசிஸ்களில்** போலீஸால் பிடிக்கப்பட்டு **தப்பித்த பிஷப்மார்** இன்னும் நான்கு பிஷப்மார் உண்டு. ஒரு CSI மாடரேட்டரும் கொலை கேஸ்ஸிலிருந்தும், லாட்ஜில் பெண் ஒருவருடன் கள்ளத்தனமாக தங்கி போலீஸ்ஸில் அகப்பட்டதை FIR போடுவதற்குள் பொழுது விடியும்முன் தப்பிக்கவைத்து அனுப்பப்பட்டார்.

**CSI சபைகளில்** இப்படிப்பட்ட **தலைவர்களால்** நம் தலைமுறை பிள்ளைகள் **ஆவிக்குரிய ஜிவியத்தில் வழிநடத்த** முடியவில்லை.

CSI டையோசிஸ்ஸில் சாட்சியிழந்த பிஷப்புகள் லிஸ்ட் நீண்டுகொண்டு போகிறது. திருச்சி, மதுரை ஆகிய ஊர்களில் இரண்டு பேர் **கோயமுத்தூர் முன் மாடரேட்டர், திருவனந்தபுரம்** டையோசிஸ்ஸில் மரித்த CSI பிஷப் போலீஸ்ஸில் அகப்பட்ட ஒருவரும் உண்டு. இப்படிப்பட்டவர்களைப்போல் இன்னும் ஆந்திர பிஷப், CSI மாடரேட்டர் **சுகந்தர்** இவர்களில் சிலர் **ஹோட்டல் லாட்ஜ்களில்** கையும் களவுமாக பிடிப்பட்ட மேலும் இருவர் உண்டு. வீட்டில் சமையல்செய்யும் ஊமைப்பெண்ணை கெடுத்து கொன்ற வழக்கில் ஜெயிலுக்கும், தூக்குக் கயிருக்கும் தப்பித்த **பிஷப்மார் உண்டு.** இன்னும் எத்தனை சொல்ல.

நல்லவர்களை, ஆவிக்குரியவர்களை பின்பற்றி **திருநெல்வேலியில்** வரப்போகிற புதிய **பிஷப் அவர்களாவது** இனி எந்த பிரச்சனைக் கும் அகப்படாது **நீதிமன்றம் செல்லாமல்** சமாதானமாக பேசி தீர்த்து திருமண்டலத்துக்கு கெட்ட பெயர் உண்டாகாமல் **மக்கள் காணிக்கைகளை** வக்கீலுக்கும், கோர்ட்டுக்கும், ஜட்ஜ்மார்களுக்கும் கொடுக்காமல் **மிஷனரி பணிகளை** ஊக்கப்படுத்தி **பிஷப் டேனியேல் ஆபரகாம்** போல், **பிஷப் ஜெபராஜ் மாடரேட்டர் ஜேசுதாஸ்** அவர்களைப்போல் **யாராலும் குற்றம்** சொல்லாதபடி **சாட்சியோடு** வாழ்ந்து **சபைகளை வசனத்தில் நடத்துவார்களாக.**

# புதிய ஆரம்பம்



**ஆண்டவருக்கு** என்னை ஒப்புக்கொடுத்த என் **பதினேழாவது பிறந்த தினமான** அந்த இரவின் நினைவுகளை என் நெஞ்சில் இன்னும் பசுமரத்தாணிப்போல நான் பதித்திருக்கிறேன். நற்செய்தியாளர் ஒருவர் எங்கள் நகரத்தில் நற்செய்தியைப் பகிர்ந்துகொண்டிருந்தார். என் நண்பன் ஒருவன் என்னை அதில் பங்குபெறும்படி வற்புறுத்தியதால் கலந்துகொண்டேன். அக்கூட்டத்தில் பேசப்பட்ட அன்றைய செய்தி என்னை வெகுவாக கவர்ந்தது. பிரசங்கிப்பவர் என்னோட நேரடியாகப் பேசுவதாகவே இருந்தது. அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தில் செயல்படுவதையும் என் பாவங்களை குறித்து எனக்கு உணர்த்துவதையும் அறிந்த உடன் எனக்கு **கிறிஸ்து தேவை** என்பதை தொடர்ந்து நடந்த அந்த கன்வென்ஷன் கூட்டத்தில் உணர்ந்தேன். **ஒரு நாள் இரவு** கிறிஸ்துவுக்கு என் வாழ்வை அர்ப்பணிக்க செய்தியாளர் **அழைப்பு** விடுத்தபோது, அதிக காலமாய் கடின இருதயத்தோடு கீழ்படியாத நான், **இறுதி** வசனம், இறுதிப் பாடல் பாடும்போது நானாக மேடையில் முன்னால் சென்றேன், என் வாழ்வில் **கிறிஸ்துவை** எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் **மனந்திரும்புதலுக்கேற்ற ஜெபத்தை** எப்படி செய்வது என்றும் அந்த அன்பான ஊழியர் கற்றுத்தந்தார்.

பிறகு வீட்டுற்கு திரும்பினேன். நான் என் வீட்டில் **மேல் மாடிக்குச் சென்று** முக்கியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிற **இனம்புரியாத அந்த மாற்றத்தை** உணர்ந்தேன். வலுவான உணர்வுகள் அதிரடியான மாற்றம் என்னில் ஏற்படவில்லை.! ஆனால் அந்த இரவின் நிலவு வெளிச்சத்தில் அந்த கூட்டத்தில் பிரசங்கித்த செய்திகளை குறித்து சிந்திக்கலானேன். நான் எடுத்திருந்த தீர்மானத்தையும் எண்ணிப்பார்க்கலானேன். என் வாழ்வில் **முதன் முறையாக** என் சுய விருப்பத்தின்படி **முழங்கால் படியிட்டு** ஆண்டவரே **இந்த இரவில்** எனக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் அதை **நீர் மட்டும்** அறிவீர் என்று ஜெபித்தேன்.

கொஞ்ஜ கொஞ்ஜமாகத்தான் நான் எடுத்திருந்த தீர்மானத்தையும் அந்த அர்த்தத்தையும் என்னால் புரிந்துக்கொள்ளமுடிந்தது. ஆண்டாண்டு காலங்களுக்குப் பிறகும் சீரான கிறிஸ்தவ வாழ்வை நான் கற்றுக்கொண்டு வருகிறேன்.

நாம் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது என்ன நடைபெறுகிறது? நீங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும்போது **ஆண்டவர் உங்களுக்கு தரும்** ஏழு பரிசுகளை நான் இங்கே பட்டியலிடுகிறேன்.

**ஒரு புதிய உறவு**

நாம் நமது வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது ஆண்டவர் நமக்கு ஒரு புதிய **உறவைத் தருகிறார்.** நம்முடைய **பாவத்தின் காரணமாக** முன்னே நாம் ஆண்டவரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தோம். அல்லது பிரிவினையாக்கப்பட்டிருந்தோம். இதுவரை நாம் இந்த உலகத்தில் **நம்பிக்கை** இல்லாதவர்களாக, **தேவனில்லாதவர்களாக** இருந்தோம் (எபே. 2:1) என்றாலும் **ஆண்டவர் நம் பாவங்கள்** அனைத்தையும் எடுத்துப்போட்டார். நம்மை **ஆண்டவரிடமிருந்து பிரித்த பாவம்** நம்மிடமிருந்து **அப்புறப்படுத்தப்பட்டது.** ஆகவே நாம் **ஆண்டவரோடு பகைவர்களாக** இருந்த நாம் இப்பொழுது **அவருக்கு நண்பர்கள்,** நாம் விசுவாசத்தினாலே **நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால்,** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. நாம் அவரின் **சிநேகிதர்கள் மா**த்திரமல்ல: அவரின் **பிள்ளைகளும் கூட.** இதைப் பரிசுத்த வேதாகமம் **இரண்டு முக்கியக் காட்சிகளாக** நமக்கு விவரிக்கிறது. முதலாவது நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம், **இரண்டாவது சுவீகாரம் கொள்வது**. நாம் நமது வாழ்வை கிறிஸ்துவுக்குள் கிறிஸ்துவுக்குக் கொடுப்பதன் மூலம் ஆண்டவர் நம்மை அவரின் **குடும்பத்தில் சுவீகாரம்** கொள்கிறார். அவர் இப்பொழுது நாம் நேசிக்கும் **பரலோகத் தகப்பன்**. நாம் ஆண்டவரின் குடும்பத்தில் **ஆவியில் பிறந்த அவரின் பிள்ளை.**

**ஒரு புதிய குடியுரிமை**

**இரண்டாவதாக,** நம் வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கும்போது ஒரு புதிய **குடியுரிமையைக்** கொடுக்கிறார். ஒரு குறிப்பிட்ட நாட்டில் குடியுரிமை பெற்றிருக்கிற நாம் இப்பொழுது **இறையரசின் குடியுரிமையைப்** பெறுகிறோம்.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் ஒருவன் **ரோமக் குடிமகனாக** இருப்பது **மேன்மையானதாக** எண்ணப்பட்டது. அப்படிப்பட்டவன் மிகக் **குறைவாக வரி** செலுத்தலாம். **ராணுவத்தில்** சேர்ந்தால் நேரிடையாகவே அவன் அங்கு **அதிகாரியாகவே** சேர்த்துக்கொள்ளப்படுவான். இராஜத் துரோகம் போன்ற ஒரு சில காரணங்களைத் தவிர **வேறு எதற்காகவும்** அவனை **சிலுவையிலறைய முடியாது.** ரோம நீதிமன்றத்தில் அவன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டால் நேரடியாக ராயனிடம் மேல்முறையீடு செய்ய அவனுக்கு உரிமையுண்டு.

ஆனால் இயேசு தன்னைப் பின்பற்றும் சீடர்களுக்கு **ரோமர்க் குடிமகன்களிலும் மேலான,** இறையரசின் **குடிமகன் என்கிற உரிமையைத்** தருவேன் என்று கூறுகிறார். **இறையரசு அருகிலிருக்கிறது** மனந்தரும்பி நற்செய்தியில் **நம்பிக்கை வையுங்கள்** (மாற்கு1:15) என்று தனது முதல் அருளுரையில் ஆண்டவர் இயேசு கூறுகிறார். **ஆண்டவரின் இறையரசு பூமியிலுள்ள அரசல்ல.** அது பரலோக, **ஆவிக்குரிய, ஆண்டவர் ஆளுகை செய்யும் ராஜ்ஜியமாகும்.** அந்த அடிப்படையில்தான் பவுல் நம்முடைய **குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது** என்றார் ( பிலி. 3:20)

நாம் **எவ்வளவு காலம்** இவ்வுலகில் வாழ்கிறோமோ அவ்வளவு காலம் **இந்த இரட்டைக் குடியுரிமையைப் பெற்றிருக்கிறோம்.** நம் தாய்நாட்டின் மீது **விசுவாசம் வைத்திருப்பதால்** ஒரு **நல்ல குடிமகன்** என்று அழைக்கப்படுகிறோம். ஆனால் அதே சமயம் நாம் கி**றிஸ்துவே தலைவராக** இருக்கிற **இறையரசின் குடிமக்களுமாய் மாறுகிறோம்.** நம் **முதன்மை விசுவாசம்** ஆண்டவருக்கே. நாம் செய்வது தவறு என்று யாராவது சொல்வார்களானால் மனுஷனுக்குக் **கீழ்ப்படிவதைப் பார்க்கிலும்** தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே **அவசியமாயிருக்கிறது.** (அப். 5:29) என்று கூறுங்கள். ஒரு நாளிலே **இவ்வுலகின் அரசுகள்** எல்லாம் **கிறிஸ்துவின் ராஜ்யங்களாக மாறப்போகின்றன**. அவர் சதா காலங்களிலும் **ராஜ்ய பாரம் பண்ணுவார்** (வெளி. 11:15)

### ஒரு புதிய குடும்பம்

ஆண்டவர் நமக்கு ஒரு **புதிய குடும்பத்தையும்** கொடுக்கிறார். ஆண்டவரோடு மாத்திரமல்ல. இப்பொழுது **நாம் மற்ற விசுவாசிகளோடும்** உறவு கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவை **உண்மையாய்** விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் **நம் சகோதரரும் சகோதரிகளுமாவார்கள். ஆண்டவருடை இந்த குடும்பத்தில்** ஆவிக்குரிய **உறவிலே கட்டப்பட்டிருக்கிறோம்.** வேதம் நம்மை ஆண்டவரின் **குடும்பத்தின் உறுப்பினர்கள்** என்று அழைக்கிறது. (எபே. 2:19) கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் **அடிக்கடி வரும் சகோதர்கள்** என்ற பதம் **குடும்ப உறவை** அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறது.

எனது பயணங்களில் வித்தியாசமான கிறிஸ்தவ விசுவாசிகளான ஆண்களையும், பெண்களையும் சந்திக்கிறேன். சந்தித்த சில நிமிடங்களிலேயே ஏதோ அவர்களை **இதற்கு முன் அறிந்தவர்களைப்போலப் அவர்களோடு பழகுகிறேன்**. இது எப்படி முடிகிறது ? ஏனெனில் நாங்கள் கிறிஸ்துவை **அறிந்திருக்கிறதினால்தான்** இது எங்களைப் பிரிக்கிற தடைகளைத் தகர்த்து **இறைவனின் குடும்பம்** என்ற **ஐக்கியத்தை** அனுபவிக்கச் செய்கிறது.

### ஒரு புதிய குறிக்கோள்

நாம் கிறிஸ்துவிடம் வரும்பொழுது ஆண்டவர் நமக்கு ஒரு **புதிய நோக்கம் கொடுக்கிறார்.** இப்போது **நமக்கென்று வாழ விரும்பாமல் ஆண்டவருக்காக** வாழ

விரும்புகிறோம். **மற்ற மக்களை** நாம் வித்தியாசமாகப் பார்க்கத் துவங்குகிறோம். அதாவது அவர்கள் நமக்கு ஏதாவது செய்யவேண்டும் என்றல்ல. **நாம் அவர்களுக்கு ஏதாவது** செய்ய வேண்டும் என்றே. நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டு நாம் தேவனுடைய **செய்கையாயிருக்கிறோம்.** அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். (எபே. 2:10)

நான் புதிதாக **கிறிஸ்துவுக்குள் வந்தபோது** ஏதோ **வித்தியாசமான மாற்றம்** நிகழ்ந்திருக்கிறது என்றும் மட்டும் எனக்குத் தெரிந்திருந்தது. உதாரணமாக **எனது மனந்திரும்புதலுக்கு** முன் நான் மிகவும் **கோபக்காரனாகவும், எரிச்சலடைபவனாகவும்** இருந்தேன். இப்பொழுது நான் **மிகவும் அடக்கமானவாக** இருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் என்கிற **புதிய நோக்கத்தில்** என் வாழ்வைத் துவங்கினேன். பிழைத்திருக்கிறவர்கள் **இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல்** தங்களுக்கென்று **மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி** இயேசு **எல்லாருக்காவும் மரித்தாரென்று** நிதானித்திருக்கிறோம். (2 கொரி 5:15)

### ஒரு புதிய ஆற்றல்

நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது வேதம் கொடுக்கும் சத்தியங்களில் ஒன்று என்வென்றால், நம் **ஆண்டவரே பரிசுத்த ஆவியானவராக நம்முள் வந்து வாசம் பண்ணுகிறார்.** இப்போது **நாம் தனியாளாக இல்லை.** கர்த்தர் **நமக்குள் இருக்கிறார். இது யாருக்கும் கிடைக்காத ஆசீர்வாதமாகும்.**

**கிறிஸ்துவின் ஆவியில்லாதவன்** அவருடையவனல்ல (ரோமர் 8:9) என்று வேதம் கூறுகிறது. நீங்கள் கிறிஸ்துவை அறிந்திருப்பீர்களானால் **பரிசுத்தாவியானவர் உங்களில் ஏற்கனவே தாபரித்திருக்கிறார்** என்று அர்த்தமாகிறது.

ஏன் ஆண்டவர் தான் **பரிசுத்த ஆவியானவரை நமக்கு அருளினார் ?** நாம் வாழ வேண்டிய ஒரு **புதிய நோக்கத்தைத்** தந்திருக்கிறார். காரணம் ஆவியானவர் தரும் **புதிய வல்லமை** இன்றி **இப்புதிய நோக்கத்தை** அடைய முடியாது. நாம் மிகவும் பலவீனர்கள் என்பதை அறிவோம். ஆவியானவரும் **நமது பலவீனங்களில்** நமக்கு உதவி செய்கிறார். (ரோமர் 8:26) **பரிசுத்தாவி உங்களிடத்தில்** வரும்போது நீங்கள் **வல்லமையைப்** பெற்றுக்கொள்வீர்கள் (அப். 1:8) **நம்முடைய சொந்த பெலத்தில்** கிறிஸ்தவ வாழ்க்கை வாழ நாம் அழைக்கப்படவில்லை. ஆண்டவர் **தம் ஆவியின் வல்லமையை** நமக்குத் தந்து உதவி செய்கிறார்.

### ஒரு புதிய சேருமிடம்

**மனமாற்றம்** என்ற பதத்திற்கு **மாற்றம்** என்றும் பொருள். அதாவது நாம் கிறிஸ்துவினிடம் வரும்போது **ஒரு புதிய வாய்ப்பை** ஆண்டவர் நமக்குத் தருகிறார். முன்பு

நாம் **நரகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்தோம்.** இப்பொழுது **பரலோகத்தை நோக்கித் திரும்பியுள்ளோம்.** முன்பு **நாம் ஆண்வரிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டிருந்தோம்.** இப்பொழுது அவருடன் **நித்தியமாக வாழப்போகிறோம்.** முன்பு நித்திய வாழ்வின் நிச்சயமற்றிருந்தோம். இப்பொழுது நாம் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23)

**நித்திய ஜீவன் எ**ன்பது ஒரு பரிசு என்று கூறுவதை இங்கு கவனியுங்கள். பலர் இதைத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். இரட்சிப்பைத் தங்கள் நற்கிரியைகளினால் சம்பாதிக்க வேண்டும் என்று அவர்கள் இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள், அது தவறு.

ஆனால் பரலோகத்தை நற்செயல்களால் அடைய நாம் நல்லவர்கள் இல்லை. **ஏனெனில்** ஆண்டவரின் **அளவுகோல் பரிபூரணம்** ஒன்றே, நமது ஒரே நம்பிக்கை கிறிஸ்து மட்டுமே. ஏனெனில் நம்மை அவர் **சொந்த இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொடுத்து** மீட்டு நமது **இரட்சிப்பை இலவசமாக நமக்கு தந்திருக்கிறார்.** அவர் பிதா இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படி **நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார்** (1 பேதுரு 13:14) என்ன **அற்புதமான வெகுமதி** இது !

## ஒரு புதிய மரணம்

ஆண்டவரை **நாம் மீட்பராக** ஏற்றுக்கொள்ளும்போது நாம் விண்ணுலகிலே நுழையும்வரை தொடர வேண்டிய **ஒரு புதிய பயணம்** என்ற **இறுதிப் பரிசினை** நமக்குத் தருகிறார். அவரைப் **பின்பற்ற வேண்டும்** என்று நாம் எடுத்திருக்கிற இந்தத் தீர்மானம் ஒரு முடிவல்ல. இது ஒரு **தொடக்கமே,** நாம் கி**றிஸ்தவர்களாக மாற அழைக்கப்படவில்லை, கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்**. கிறிஸ்தவ வாழ்வு ஒரு **புதிய பயணமே** கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பது என்பது ஆவிக்குரிய ஆயுள் காப்பீடு அல்ல. மாறாக நாம் விண்ணுலகம் செல்லும் வரை அதை நாம் கொண்டிருக்க வேண்டியதாகும். **கிறிஸ்தவ வாழ்வு என்பது நம் இறுதி மூச்சு வரை** தொடர வேண்டிய **ஒரு பயணமாகும்.**

**இதில் சிறப்பு மிக்கது என்னவென்றால் இனி நாம் தனியாக நடப்பதில்லை கிறிஸ்துவும் நம்மோடு இணைந்து நடக்கிறார் என்பதாகும்.** இதுவுமாக பெரும் கிருபையாகும்.

– நன்றி பில்லி கிரஹாம் நற்செய்தி இயக்கம்

# பரலோகமே ! பரவசமே !!


Dr. **Liliyan Stanly,** M.B.B.S., D.C.H.,

திருமதி **Dr. லில்லியன் ஸ்டான்லி**

இதோ ! **கடவுளின்** உறைவிடம் **மனிதர் நடுவே** உள்ளது. அவர் **அவர்கள் நடுவே குடியிருப்பார்.** அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார். அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார் (வெளி. 21:3,4)

வியாதியின் வேதனையோடு **கண்களை மூடுகிறேன்.** திறக்கும்போதோ **எவ்வித வலியுமில்லை.** எனக்கு முன்னே **பரலோக வாசல்கள்** திறந்திருக்கின்றன. **திறந்த கரங்ளோடு** வரவேற்கும் **இயேசுவின் அரவணைப்பிற்குள்** ஓடுகிறேன். அவரது கைகளைத் திறந்து அதில் காணப்படும் த**ழும்புகளுக்கு முத்தம்** கொடுக்கிறேன். அங்கு எங்கும் **ஆர்ப்பரிப்பின் பாடல்கள்.** வர்ணிக்க முடியாத **அழகு.** தேவன் **சிங்காசனத்தில்** வீற்றிருக்கிறார். **பரலோகத்திலிருப்பதன்** பரவசத்தை ருசிக்கிறேன். **எனக்கருமையானவர்கள்** என்னைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

**பதின்மூன்று** வயதில் என்னை **கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த நாளை** நினைவு கூறுகிறன். அதன் பின்பு **போராட்டத்தின்மே**ல் பேராட்டம். வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் **இடுக்கமான வாயிலையும்** குறுலான **வழியையும்** தெரிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. நீயாவது தேவனுடையப் பிள்ளையாவது நீ நரகத்திற்குத்தான் போவாய் என்று **சாத்தான் என் காதுகளில் ஓதிக்கொண்டே** இருந்தான். அவனை நம்பி நடுங்கினேன். என் அறையில் தனியே **முழங்காலிட்டு** தேவனை நோக்கி, ஆண்வரே **இந்த சோதனையை** என்னால் மேற்கொள்ள முடியாது. இந்த குறிப்பிட்ட **பாவத்தைச்** செய்ய விரும்புகிறேன். ஆனால் உம்முடைய **கட்டளையை மீற அஞ்சுகிறேன்.** தவிக்கிறேனே! என்று கதறிய அந்த நாள் என் நினைவிற்கு வருகிறது. கண்ணீரின் பெருந்துளிகள் தரையில் விழுகின்றன. **சோதனையைச் சந்திக்க** பெலனற்றவளாய் எழுந்து தள்ளாடிச் செல்கிறேன். ஆனால் **சோதனையையோ** காணவில்லை! **அப்பாடா** என்று பெருமூச்சு விடுகிறேன்.

**யுத்தத்தின்மேல்** யுத்தம், **அடிமேல்** அடி. ஆனால் நான் நிலை தடுமாறவில்லை. **வேதத்தை வாசித்தன்,** ஜெபித்தேன். ஒருவர் நீ எப்போதுமே வேதத்ததை வாசித்துக் கொண்டும் ஜெபித்துக்கொண்டும் இருப்பதினால் **நீ பரிசுத்தவாட்டி என்று நினைத்துவிடாதே** என்றார். உடனே மனதில் **புண்பட்டேன்,** ஆனால் எச்சரிப்படைந்தேன். மற்றொருவர் என்னை பார்த்து நீ **இரண்டாம் வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவாய்** என்று கனவு **காணாதே** என்றார். உடனே நான் அதிர்ச்சியடைந்தாலும் கர்த்தர் இன்னும் **உன்னை வனைந்துகொண்டிருக்கிறார். கலங்காதே** என்று என்னையே நான் தேற்றிக்கொண்டேன். நானே **பரலோகத்திற்குத்** தகுதியற்றவளாக மாறிவிடாதவாறு என் **உடலை அடக்கிக் கட்டுப்படுத்தினேன்.**

தேவனது கிருபையைக் குறித்தும் எனது பொறுப்பை குறித்தும் கூடுதலாகப் புரிந்து கொண்டேன். **தேவனது கிருபையைப்** பற்றிக்கொண்டு **அவரோடு ஒத்துழைக்க** அவரது **கிருபைக்காய்** கெஞ்சினேன், என் **வாழ்க்கை முடிந்து** இப்போது நான் **பரலோகத்திலிருக்கிறேன்.** என் போராட்டங்கள் ஓய்ந்தன. பறப்பதுபோல இலகுவாக உணறுகிறேன். தேவன் எனக்கு **உண்மையுள்ளவராக இருந்தார்.** என்னைக் கைவிடவேயில்லை. **என் போராட்டங்களைத்** திரும்பிப் பார்த்து **இத்தனைப் பெரிய பரவசத்திற்கு** அவை கால் தூசி பெறாது என்கிறேன். இது என் கற்பனைக்கெட்டாத பரலோகம் என் கனவிலும் இது ஆயிரம் பல்லாயிரம் மடங்கு பிரமாதம், ஆகா. **என்ன அருமையான மாளிகையை** எனக்காக கர்த்தர் ஆயத்தப்படுத்தி இருக்கிறார். **முடிவில்லாத சமாதானமும்** அமரிக்கையும் கொண்டாட்டமும் நிறைந்த இவ்விடத்தில் **கண்ணிருக்கும் கவலைக்கும்** இடமேயில்லை.

நண்பரே வாரும் ! **பிசாசினிடத்தில்** ஏமாந்து பேகாதீர்கள். **போராட்டத்தைப்** போராடுங்கள். விலையேறபெற்ற **உங்கள் விசுவாசத்தை** உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். **பாவம் செய்ய** சோதிக்கப்பட்டால் எரியும் களவாயிலும் கும்மிருட்டிலும் தள்ளாடப்படும்போது நித்திய நித்தியமாய் **எப்படி இருக்கும்** என்று யோசித்துப் பாருங்கள். **பாவத்தில் தவறி விழுந்துவிட்டால்** மெய்யான **மனந்திரும்புதலோடு** தேவனிடத்தில் வாருங்கள். தன்னிடத்தில் வருபவர்களை அவர் **தள்ளிவடுபவரல்ல**. அவரால் **மன்னிக்கமுடியாத பாவம்** அவிசுவாசம் தவிர வேறில்லை. **நம்பி** வாருங்கள். **விசுவாசத்தினால்** நீதிமான் பிழைப்பான்.

## நரகத்தில் எப்படி வந்து சேர்ந்தேன் ?

**கோழைகள்,** அவிசுவாசிகள், அருவருப்புக்குரியோர், கொலையாளிகள், விபசாரக்காரர், சூனியக்காரர், சிலை வழிபாட்டினர், **பொய்யர்** ஆகிய அனைவருக்கும் **நெருப்பும் கந்தகமும்** எரியும் ஏரியே உரிய பங்காகும். இதுவே **இரண்டாம்** சாவு (வெளி 21:8)

இந்த பயங்கரமான இடத்திற்கு **எப்படி வந்து சேர்ந்தேன்?** ஏதோ தவறு நடந்துவிட்டது. நான் **கிறிஸ்தவள் இல்லையா?** ஆலயத்திற்குச் சென்று **தசமபாகம் செலுத்தவில்லையா?** ஐயோ ஆண்டவனே, **தவறு ஏதோ நடந்துவிட்டது**. என்று அலறுகிறேன், அவரது கேள்வி என்னைத் தொடை நடுங்கச் செய்கிறது. **நீ யார்?** நான் யாரா? என்ன கேள்வியிது? ஆண்டவா ! அழுகிறேன். **தெய்வமே** என்னைத் தெரியவில்லையா ? அடிக்கொருதரம் **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்** என்பேனே! ஊழியக் குழுவில் கூட **அங்கம் வகித்தேனே.** காலையிலும் மாலையிலும் **வேதம் வாசித்து ஜெபித்தேனே!.** ஊழியங்களைத் தாங்கினேனே!. குருடர் அநாதைகள் மற்றும் திக்கற்றோர் **விடுதிகளைச் சந்தித்து வந்தேனே** ஆனால் **நரக வழி** எனக்குக் காட்டப்பட்டபோது அதிர்ச்சி அடைந்து **நெஞ்சில் அடித்துக்கொண்டு** முடியைப் பிய்த்துக்கொண்டு **பயந்துக்கொண்டு செல்கிறேன்**. ஒருபோதும் இதை நான் எதிர்பார்க்கவில்லையே !

**அக்கினி** நாவுகளும், **கரும்புகையும்** எழும்பி வந்த அந்தக் **குழிக்குள்** விழும்போது அலறுகிறேன். **பிசாசுகள்** என்னை **அணைத்துக்கொள்ளுகின்றன**. பெற்றோரை எப்படிப் **பொய்சொல்லி** ஏமாற்றினேன். அவர்களுக்குக் **கீழ்படியாமலிருந்ததும் அவதித்ததும்,** திருமணமானபின் **துணைவரோடு சண்டைபோட்டு** நாவைக் **கட்டுப்படுத்தாமலிருந்ததும் அவருக்கு உண்மையற்றவராயிருந்ததும்** அலையலையாய் **இப்போதுதான் நினைவில் புரளுகின்றன.** உலகப் பொருட்களுக்கு ஊழியம் செய்து நகைப்பெட்டியை **நிரப்பி** அலமாராவை **வழியச் செய்து** வீடுகளைக் கட்டி **கார்கள் வாங்கினேன்.** உயர்ந்த **சம்பளம் என்று ஓடியதால்** தேவனுக்கு கொடுக்க எனக்கு **நேரமில்லாமல் போயிற்று.** சின்னச் சின்ன **பொய்கள்** சொன்னேன் (யார்தான் சொல்லவில்லை?) இவையெல்லாம் **பெரிய பாவம்** என்று நான் எண்ணவில்லை. **நண்பரும்** என் **நன்மையை** நாடினவரும் ஆலோசனை கூறியபோது **மனதைக் கல்லாக்கினேன்.** பிடிவாதமாய் **முரட்டாட்டமாய்** இருந்தேன். என்னையே ஏமாற்றிக்கொண்டேன். தகப்பனின் சித்தத்தை நான் செய்யவில்லை என்று நான் உளமாற **உணர்ந்தும்** இது **அப்படி ஒன்றும்** பெரிய பாவமில்லை என்று என்னையே ஏய்த்துக்கொண்டேன். **தேவனது சத்தம்** நெஞ்சில் ஒலித்தும் அதை அடக்கிப்போட்டேன் என்னுள் கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த **மனசாட்சியைப் கொன்றும் போட்டேன்** ஓ! தெய்வமே !

என்னால் **சூடு தாங்க முடியவில்லையே!** ஏ.சி யிலே வாழ்ந்தேனே!. இந்த இருள் **என்னை நடுங்கவைக்கிறதே.** ஒரு மணிநேர **பவர் கட்டிற்கே** மேலும் கீழும் குதிப்பேனே என்றென்றுமாய் **இருளில் தடவிக்கொண்டு** இருக்கவேண்டுமா? ஐயோ கடவுளே ! என்னை சுற்றியுள்ள இந்த **புழுக்கள்** உஷ்ணத்தில் **செத்துப்போகும்** என்று நினைத்தேனே. ஆனால் இந்த இராட்சத கம்பளிப் பூச்சிகள் என்மேல் விடாமல் ஏறிக்கொள்கின்றனவே. **தூசியே**

எனக்கு அலர்ஜியாச்சுதே, அப்படியிருக்கும் **இதை எப்படிச் சகிப்பேன்?** ஐயா தேவனே **என்னை மன்னிக்க மாட்டீரா ?** என் **கெஞ்சுதலைக் கேளும்,** உமது **கட்டளைகளை எல்லாம் அறிந்திருந்தேன்.** ஆனால் **கீழ்படியாமை** இவ்வளவு கொடுமையாக இருக்கும் என்று நினைக்க வில்லையே? உம்முடைய அன்பினால் பாராமுகமாய் இருந்துவிடுவீர் என்றல்லவா நினைத்துவிட்டேன். நான் நித்திய நித்தியமாய் **எரிய வேண்டுமா?** உமது சித்தம் செய்வது **அதிகக் கடினமாய்** இல்லையே, **அதை செய்திருந்தால் எத்தனை நலமாய்** இருந்திருக்கும். இப்போது அவசரம் ஏதும் இல்லை. **மெதுவாய் மனந்திரும்பிக்கொள்ளலாம்** என்ற **பிசாசை நம்பி** மோசம் போனேனே.! இத்தனை **சடுதியாய்** இத்தனை **சீக்கிரமாய் மரணம் என்னைச் சந்திக்கும்** என்று நினைக்கவில்லையே ! **உம்மைச் சந்திக்க ஆயத்தமாக** நேரமில்லாமல் போயிற்று ! **அதிக அலுவலாயிருந்தேன்.!** ஐயோ தெய்வமே ! **என் வாழக்கையை** வாழ **இன்னொரு தருணம்** கிடைக்குமா? இனி **அப்பழுக்கற்ற வாழ்க்கை வாழ்வேன்** என்று கையடித்துக்கொடுக்கிறேன். சாமி எனக்கு சற்று ஓய்வு கிடைக்காதா? இதுவும் போதாதென்று இங்கிருந்தபடியே நான் **இழந்து போன மோட்சத்தைப்** பார்த்து பார்த்து நொந்து போகிறேனே!

நண்பா! இந்தக் **கொடிய இடத்திற்கு** வந்துவிடாதே,. **சோதனையை மேற்கொள்ள முடியாது** என்று எப்போதாவது நினைக்கத் தோன்றுமானால் **நித்திய அக்கினியை** நினைத்து அடுத்த பக்கமாய் தலைதெறக்க **ஓடிவிடு.** இங்கே வந்தால் அதுவே முடிவு. வெளியேற வழியே கிடையாது! ஐய்யய்யோாாா !


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# இல்லத்தில் தேவ பக்தி

சார்லஸ் H. ஸ்பர்ஜன்

என் சகோதரர்களே, நீங்கள் எப்போதும் **கிறிஸ்துவைப்போல இருங்கள்.** பொதுவிடங்களில் **அவரைப் (இயேசுவை) பிரதிபலியுங்கள்.** நம்மில் அநேகர் ஒவ்வொரு நாளும் சக மனிதர்களுக்கு முன்பாக வேலை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் **கவனிக்கப்படுகிறோம்.** நம்முடைய **வார்த்தைகள்** கிரகிக்கப்படுகின்றன. **நம் வாழ்க்கை** சிறு சிறு பகுதிகளாக **பரிசோதித்துப் பார்க்கப்படுகிறது.** கழுகு கண்கொண்ட உலகம் **நாம் செய்கின்ற அனைத்தையும் உற்றுக் கவனிக்கிறது,** கடுமையாக விமர்சனம் செய்பவர்கள் நம்மை சூழ்ந்திருக்கிறார்கள். **பொதுவிடங்களில் நாம் கிறிஸ்துவைப்போல வாழ வேண்டும்** நம்மையல்ல **நமது எஜமானனையே** நாம் வெளிப்படுத்திக் காண்பிக்க வேணடும். அப்போதுதான் **இனி நான் அல்ல,** கிறஸ்வே எனக்குள் **பிழைத்திருக்கிறார்.** (கலா 2:20) என்று நாம் சொல்ல முடியும்

எங்கெங்கு நாம் இருக்கிறோமா அங்கு மட்டுமல்ல நமது சபைகளிலும் கிறிஸ்துவின் ஆவியை நாம் எடுத்துச்சொல்ல வேண்டும். உங்களைப் பற்றிய உங்கள் சக அங்கத்தினர்கள் உங்களை காண்பித்து அவர் **இயேசுவுடன் இருக்கிறார்** என்று சொல்லும் படியான நிலை காணப்பட வேண்டும்.

ஆனால் அவற்றையெல்லாம்விட **உங்கள் இல்லங்களில்** தேவ பக்தி இருப்பதற்குக் கவனம் செலுத்த வேண்டும். உண்மையான தேவ பக்தியை வெளிப்படுத்தும் இல்லம்தான் இதற்கு சிறந்த சான்று. **உங்களுடைய உண்மையான குணத்தை** உங்கள் **குழந்தை** , உங்கள் மனைவி உங்கள் **நண்பர்** யாவரும் அறிந்துக்கொள்ள முடியும். ஒரு நல்ல மனிதன் அவனுடைய குடும்பத்தை சேர்ந்த அனைவரையம் செம்மைபடுத்துவான். ஒருவனுடைய **மனைவி** அவனுடைய **பிள்ளைகள்** ஏன் அவனது வீட்டில் வளர்க்கப்படும் **நாயும், பூனையும்**கூட சிறப்பானதாக இல்லாவிட்டால் அந்த மனிதன் உண்மையான கிறிஸ்தவர் என்பதை **நான்** நம்பமாட்டேன என்று **ரௌலண்ட் ஹில்** என்பவர் ஒரு முறை தெரிவித்துள்ளார்.

உங்கள் குடும்பத்தை சேர்ந்தவைகள் உங்கள் கிறிஸ்தவத்திற்கு சிறந்தவையாக இல்லாவிட்டால் மனிதர்கள் மற்றவர்களின் வீட்டை காட்டிலும் **இது சிறந்த வீடு** என்று சொல்ல முடியாவிட்டால் அப்போது ஏமாந்து போகாதீர்கள். கடவுளுடைய கிருபையில் உங்களுக்கு பங்கு ஒன்றும் இல்லை. உங்கள் குடும்பத்தில் எப்பொழுதும் தேவ பக்தி உடையாவரா யிருங்கள். நீங்கள் (Practical) **நடைமுறைக்குறிய பக்தியை** கொண்டிருக்கிறீர்கள் என்று அனைவரும் சொல்ல வேண்டும். உங்கள் இல்லத்திலும் உலகத்திலும் அது காணக்கூடிய அளவில் வெளிப்படுத்தப்பட வேண்டும், அங்கே உங்கள் குணத்தை குறித்து கவணமாயிருங்கள். **அங்கே நாம் எவ்வாறு இருக்கிறோமோ** அதுவே **நமது உண்மையான நிலையாகும்.**

# கேள்வி? பதில்!

**கேள்வி :–** நாலுமாவடி சகோ. மோகன் C. லாசரஸ் அவர்கள் சகோ. **எசேக்கியா பிரான்சிஸ்** அவர்கள் நடத்தும் வேதபாட கூட்டத்தில் போய் கலந்துகொண்டு பைபிள் ஸ்டடியை கற்றுக்கொள்ள சிபாரிசு செய்திருக்கிறாரே ! நான் போகும் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் எசேக்கியா பிரான்சிஸ் உபதேசம் தவறனாது. யாரும் அவர் நடத்தும் கூட்டத்துக்கு போக வேண்டாம் என்கிறாரே. உங்கள் அபிப்ராயம் என்ன ?

**பதில் :–** ஏற்கனவே ஜாமக்காரனில் எழுதினேன். மோகன் C. லாசரஸ் ஆறுதலின் பிரசங்கம் மட்டுமே ஜனங்களை கவறுகிறது. ஆனால் அவர் உபதேசம் மிக தவறானது. அவர் ஜெபத்தில் ஆட்களின் பெயரை கர்த்தர் காண்பித்தார் என்று அறிவிப்பது **பொய் உபதேசம்,** அவர் பேசும் அன்னிய பாஷை உபதேசம் **பொய்யானது, ஜெப நடை** என்ற உபதேசம் வேத அடிப்படை **இல்லாத உபதேசம்.** ஒவ்வொரு ஊரை சுற்றி நடந்து அந்த ஊரில் உள்ள பிசாசை ஜெபித்து துரத்துவது. ஒவ்வொரு இந்து கோவில்களையும் சுற்றி அந்த பிசாசை சபித்து ஜெபிப்பது, இதற்காக ஒரு AC பஸ்சை வாங்கி பல ஊர்களை சுற்றுவது. பரிசுத்த ஆவி இப்படி செய்ய சொன்னதாக கூறுவது **பொய் ஆகும்.** FMPB நன்பர் சுவிசேஷ ஜெப குழுவினர் இவர்களைப் போல ஒரு பஸ்சை வாங்கி அதற்கு சுவிசேஷ ரதம் என்று பெயர் வைத்து ஊர் ஊராக பயனம் செய்து ஒவ்வொரு ஊரிலும் இறங்கி துண்டு பிரதிகளை அளித்து, பாட்டுப் பாடி சுவிசேஷம் அறிவிப்பது. அவர்களில் யாராவது கிறிஸ்துவைப் பற்றி மேலும் விவரம் அறிய ஆசைப்பட்டால் அவர்கள் பெயர் விலாசம் எழுதி அருகில் உள்ள FMPB மிஷனரிகளிடம் ஒப்படைத்து அந்த ஊழியர்களை தொடர்ந்து தொடர்பு கொள்ள செய்வது. அப்படி பலரை அந்த ஊரில் ஆதாயப்படுத்தி ஆராதனை நடத்தி சபைகளை உருவாக்குகிறார்கள். FMPB சகோதரர்கள் பஸ்ஸில் பயனம் செய்து ஊரைச்சுற்றி **ஜெப நடை** செய்யாமல் **சுவிசேஷம்** அறிவிப்பது **ஆவியானவரின் ஆலோசனையா?** ஜெப நடைக்காக **ஊர் சுற்றி வருவது** பரிசுத்த **ஆவியானவரின் ஆலோசனையா ?** எது சரி என்று நீங்களே தீர்மானியுங்கள் !

நான் ஒவ்வொரு முறையும் இயேசுவை **முகமுகமாய்** கண்டு ஜெபிக்கிறேன். அப்படியே கூட்டத்துக்கு வந்த நீங்கள் எல்லாரும் **இயேசுவை முகமுகமாய்** பார்த்து ஜெபியுங்கள் என்ற தவறான **கள்ள உபதேசத்தை** கூறும் மோகன் C. லாசரஸ் அவர்களின் **உபதேசம் தவறு.** இயேசுவை முகமுகமாய் பார்க்க முடியாது என்று நான் கொடுத்த ஆலோசனை வசன வெளிச்சத்தில் பார்த்து புரிந்து கொள்ளுங்கள் என்று ஜாமக்காரனில முன்பே எச்சரித்தேன். மோகன் C. லாசரஸ் இதுபோன்று அவருடைய தவறான பல உபதேசங்களை வெளிப் படையாகவே ஜாமக்காரனில் சுட்டிக் காட்டி வாசகர்களை எச்சரித்தேன்.

இப்போது பெரும்பலான **பெந்தேகோஸ்தே** பாஸ்டர்களே சகோ. **எசேக்கிய பிரான்சிஸ்** ஊழியமும், **உபதேசமும்** தவறானது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது **எசேக்கியா பிரான்சிஸின்** உபதேசத்தை பின்பற்ற மோகன் C. லாசரஸ் தன் விசுவாசிகளுக்கு சிபாரிசு செய்கிறார் இது தன் விசுவாசிகளை தவறான வழியில் அவர் நடத்திகிறார் என்பதை உணர்ந்து உங்களை ஜாக்கிறதைப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சகோ. எசேக்கியா பிரான்சிஸ்**

**சகோ. எசேக்கியா பிரான்சிஸ்** அவர்கள் தன் ஊழியத்தில் அவர் கால்பதித்த நாள்முதல் நான் அவரை மிகவும் நன்றாக அறிவேன். அவரின் **ஆரம்ப ஊழியம்,** அவர் இரட்சிப்பு முழுநேர ஊழியத்துக்கு அவர் ஒப்புக்கொடுத்த விவரங்கள் யாவும் மிக நன்றாக அறிவேன்.

வெல்லூர் BYM சகோ. **R. ஸ்டான்லி** அவர்கள் கல்லூரி வாழ்க்கையில் தொடங்கிய ஜெப குழுவிலும், வாலிபர் எழுப்புதல் முகாமிலும் இவரின் பங்களிப்பு மிகஅதிகம். சகோ. R. ஸ்டான்லி அவர்களைப்போல் பைபிள் வசனத்தை போதிக்கும் ஆசிரியராக தேர்ச்சிப்பெற்று விளங்கினார்.

ஒரு கட்டத்தில் சகோ. R. ஸ்டான்லிக்கு BYMன் அடுத்த **தலைவராக** வர இருந்தவர். திடீரென்று எப்படியோ ஒரு **புதுமையான உபதேசம்** அவருக்குள் புகுந்தது. அந்த தவறான உபதேசத்தை வாலிபர் கூட்டங்களிலும் அறிமுகப்படுத்தி வளர்ந்துவரும் வாலிபர்களை உபதேச குழப்பத்திற்கு உள்ளாக்கினார். சகோ.R.ஸ்டான்லி உடன் இருந்த நண்பர்கள் அவரின் தவறான உபதேசம் நம் கொள்கைக்கு புறம்பானது என்று சகோ.R. ஸ்டான்லியிடம் கூறினார்கள். முடிவில் சகோ. R.ஸ்டான்லியும் அதை கவனித்து சகோ. **எசேக்கியா பிரான்சிஸ்சை** தனியே அழைத்து உடன் ஊழிய சகோதரர்கள் கூறிய உபதேச தவறுகளை சுட்டிக்காட்டினார். ஆனால் சகோ. எசேக்கியா பிரான்சிஸ் கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தியதை நான் மாற்றிக்கொள்ள விரும்பவில்லை என்று கூறிவிட்டார்.

உடனே நல்லபடியாக தன் குழுவிலிருந்து அவர் சுதந்திரமாக தன் இஷ்டம்போல் ஊழியம் செய்ய **மனவருத்தம் இல்லாமல்** BYM ஊழியத்திலிருந்து எசேக்கியா பிரான்சிஸ்ஸை ஞானமாய் பிரித்து அனுப்பிவிட்டார்.

இப்போது சுதந்திரமாக கன்வென்ஷன் செய்தியாளராக செல்ல ஆரம்பித்தார். இந்த சூழ்நிலையில் **ஜெர்மனி** தேசத்தில் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த வாலிபர்கள் சுமார் 27 ஆயிரம் பேர்களை ஜெர்மனி அரசாங்கம் **அகதிகள்** முகாம்களில் தங்க வைத்தனர். அக்கூட்டத்தில் ஒருவரை தவிற அத்தனை வாலிபரும் **இந்து மதத்தை** சேர்ந்தவர்கள் ஆகும். அவர்கள் மத்தியில் முதல் மிஷனரியாக ஊழியம் செய்ய Dr. புஷ்பராஜ் ஆகிய நான் அழைக்கப்பட்டேன். அவர்களில் 2000 வாலிபர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். ஜெர்மணி தேசத்தின் FRANKFURT **பிராக்போர்ட்** நகரத்திலிருந்து ஜெர்மணியின் எல்லையான **பெர்லின்** வரை அனைத்து இடங்களிலும் அகதிகள் பரவலாக தங்க வைக்கப்பட்டிருந்தனர். அத்தனை நகரங்களுக்கும் நான் சென்று அகதி முகாம்களில் சுவிசேஷ கூட்டம் நடத்தினேன், அதன்பின் தொடர் ஊழியத்திற்காக இந்தியாவிலிருந்து பாஸ்டர் **பாஸ்கரதாஸ்.** சகோ. **சாம் ஜெபதுரை**. **சாது செல்லப்பா** போன்ற பலரை **ஜெர்மணிக்கு** அனுப்ப ஏற்பாடு செய்தேன். அவர்கள் மூலமாக சபை மக்கள் வளர தொடங்கினார்கள். அதே சமயம் எனக்குபின் ஜெர்மனிக்கு சென்ற ஊழியர்கள் அனைவரும் **அன்னிய பாஷைகளை** நுழைத்ததால் **சபைகள்** பல**த்துண்டுகளாக** உடைந்தது. **தவறான**

**உபதேசத்துக்கு**ள் பிரிந்துபோனது. இந்த சமயம்தான் **எசேக்கிய பிரான்சிஸ்** அவர்களையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவரையும் ஜெர்மன் சபைக்கு அழைக்க சிபாரிசு செய்தேன். அதன்பிறகுதான் சபை மேலும் குழப்பமான உபதேசத்துக்குள் நுழைந்தது, எல்லாரும் அவர் உபதேச தவறுகளைப் பற்றி என்னிடம் புகார் அளித்தனர். அதன் ஆதாரமாக ஆடியோ **டேப்பும், வீடியோ டேப்பும்** அனுப்பினர். அதைநான் பார்த்து அதிர்ந்துவிட்டேன். பரிசுத்த ஆவியானவரை வைத்து அவர் இஷ்டம்போல் விளையாட ஆரம்பித்தார்.

அவர் கூறியது ஆவியானவரை நான் தொட்டு பழகியிருக்கிறேன். இப்போது இந்த கூட்டத்துக்கு வந்த நீங்களும் உணரலாம். ஆவியானவர் இங்கு ஒவ்வொருவர் அருகிலும் இருக்கிறார். பெண்கள், ஆண்கள் யாவரும் அப்படியே வலது பக்கமாக சாயுங்கள். ஆவியானவரின் **மார்பை** உணருவீர்கள். கண்ணை மூடியபடி முயன்று பாருங்கள். சிறுது நேரம் கழித்து சகோ. எசேக்கியா பிரான்சிஸ் அவர்கள் இப்போது இந்த கூட்டத்தில் எத்தனைபேர் ஆவியானவரின் மார்பை தொட்டு உணர்ந்தீர்கள் என்று இவர் கேட்க. பத்து, பதினைத்து கைகள் தூக்கி காண்பிப்பதை வீடியோவில் நானும் பார்த்தேன். எத்தனை பெரிய **ஏமாற்றுத்தனம்** இது. பாவம் வசனம் அறியாத அந்த புது கிறிஸ்தவர்கள் மிகவும் ஏமாற்றப்பட்டார்கள். **ஜெர்மணியில்** பல சபைகள் அவர் உபதேசத்தை எதிர்த்தார்கள். 10 அல்லது 12 சபைகள் மட்டும் அவரை ஏற்றுக்கொண்டு அடிக்கடி அவரை இந்தியாவிலிருந்து வரவழைத்ததால் ஜெர்மனி சபைகளோடு உள்ள நெருக்கம் அதிகமாயின. என்னிடம் எசேக்கிய பிரான்சிஸ் பேசும்போது **திருமணம் செய்யாது** செய்யும்படியான **ஊழியம்தான் என் அழைப்பு,** அதனால்தான் 40 வயது நெருங்கும் நிலையிலும் பலர் என்னை வற்புறுத்தியும் திருமணம் செய்யாமல் இருக்கிறேன் என்றார்.

அவருக்கு பணம் பெருக ஆரம்பித்து, அவருடைய நிலைமை உயர்ந்தது. புதிய **ஊழிய ஸ்தாபனமும்**. சபைகளும் இந்தியாவில் ஆரம்பித்தார். திடீரென்று ஜெர்மணியல் உள்ள **டொச் வெள்ளைக்கார பெண்ணை** விவாக செய்துகொண்டதாக அறிந்தேன். அவரை இந்தியாவுக்கும் அழைத்து தான் செல்லுல் கூட்டங்களில் அறிமுகப்படுத்தினார். அவர் மூலமாக ஜெர்மணியில் உள்ள **டோச் சபைகளில்** தன் பிரசங்கத்தை அந்த பெண் **ஜெர்மணி பாஷையில்** மொழி பெயர்த்து உதவியது. ஜெர்மணி தேசத்து டொச் சபைகளிலும் பிரசங்கம் செய்ய அடக்கடி அவர் அழைக்கப்பட்டார். அவர் பண நிலைமை மகவும் உயர்ந்தது.

ஆவியானவரைப் பற்றிய இப்படிப்பட்ட மிகவும் தவறான வேத வசனத்துக்கு மாறாக உபதேசிக்கும் ஒருவர் நடத்தும 10 நாள் கூட்டங்களுக்கு கண்டிப்பாக கலந்துகெள்ளுங்கள். என்ற சகோ. மோகன் C.லாசரஸ் தன் விசுவாசிகளை வற்புறுத்துகிறார் என்றால் சகோ. மோகன் C. லாசரஸ்சும் அதே தவறான **உபதேசத்தையே** கைக்கொண்டு தன் விசுவாசிகளையும் தவறான பாதையில் நடத்துகிறார் என்பது விளங்குகிறது அல்லவா ! ஆகவேதான் நான் **ஜாமக்காரன்** மூலமாய் சகோ. மோகன் C. லாசரஸ் உபதேசங்களில் **பொய்** உபதேசங்களை மட்டும் **பட்டியலிட்டு** எச்சரிக்கிறேன். இதற்கு மேலும் இதை வாசிப்பவர்களில் யாராவது சகோ. மோகன் C. லாசரஸை நம்புவீர்களேயானால் அது உங்கள் இஷ்டம். அறிவிக்க வேண்டியதை அறிவித்துவிட்டேன்.

**பரிசுத்த ஆவியானவர் ஆவியாய் இருக்கிறார், ஆவியானவருக்கு சரீரம் இல்லை அவரை தொடவோ தொட்டு உணரவோ இயலாது.**

## அற்புதம் நடந்த கதை *நம்பிக்கையூட்டும் நவ இந்தியக் குடிமகள்*

ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள் துளசி. **கோவிட்-18 ஊரடங்கால்** வறுமைக்குத் தள்ளப்பட்ட பலகோடிப் பெற்றோரில் அவளது பெற்றோரும் ஒருவர். **துளசிக்கு படிக்க ஆசை.** ஆனால் இணையதள வகுப்பில் பங்கேற்க அவளிடம் **ஆன்ராய்ட் கைபேசி இல்லை.** வாங்கவும் வசதியில்லை. **எவரிடமும் யாசகம் கேட்கவும் விரும்பமில்லை**. இந்த மாம்பழ சீசனில் பழங்கள வாங்கி விற்பனை செய்து வரும் லாபத்தை சேமித்து **தன் பெற்றோருக்கு சிரமமின்றி தன் கல்வித் தேவையை சந்திக்க விரும்பினாள்.**

அப்படி வீதியோரம் அவள் கடை பரப்பி பாட புஸ்தகங்களை கையில் வைத்து படித்துக்கொண்டிருக்கும்போது எதிர்பாராமல் முன்பின் தெரியாத வாடிக்கையாளர் ஒருவர் அவளிடம் பேச்சுக் கொடுத்தார். அவளது கனவையும், அதில் அவள் கொண்டிருந்த உறுதியையும், **சமரசம் செய்துகொள்ளாத** அவளது திடமனதையும் பார்த்து திகைத்துப் போனார். அப்போதே 12 மாம்பழங்கள் தனக்குத் தேவைப்படுவதையும் அதற்கு ரூ. 1,20,000 தான் தருவதாகவும் கூறி தனது டீலை வெளிப்படுத்தினார். பின் அதற்கான பணத்தையும் அவளிடம் செலுத்திவிட்டதோடு சில நாட்களுக்குப்பின்னர் அவளுக்கு வேண்டிய சீருடை புத்தகங்கள் கைபேசி முதலானவற்றையும் வாங்கிக்கொண்டு வீடிதேடி வந்து **அன்பளிப்பாக்கினார்.** இந்த நல்ல சமாரியன் செய்த அசாத்யமான இந்தச் செயல் இந்தியா முழுவதும் தற்போது பேசு பொருளாகியுள்ளது.

Selected : ஏநல்ல சமாரியன்

**SEPTEMBER - 2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.